சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C.ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

MCOP.No.14/2022

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி எ.ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. P. செந்தில்குமார், பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. முருகேசன் | த/பெ: காடையப்பன் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 24.07.2026 | தாலுக்கா : |

**முதல் விசாரணை...**

இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் இல்லை.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. T.N.68N0086 என்ற அரசு பேருந்தை விபத்து சமயத்தில் நான்தான் ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். மனுதாரர் அந்த பேருந்தில் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்து திருவாரூர் - திருத்துறைப்பூண்டி மெயின்ரோட்டில் தண்டலைச்சேரி அருகே விபத்து நடந்தது என்றால் சரிதான். அரசு கலைக்கல்லூரி அருகே உள்ள வேகத்தடையில் பேருந்து ஏறி இறங்கும் போது விபத்து நடந்தது என்றால் சரிதான்.

2. நான் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டு பேருந்தில் பயணம் செய்த மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு மணலியில் முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். என் மீது

திருத்துறைப்பூண்டி காவல்நிலையத்தில் விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. விபத்து எனது அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணமாக ஏற்பட்டது என்று முதல்தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்படவில்லை என்று நான் யாரிடமும் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து எனது கவனக்குறைவு காரணமாக ஏற்பட்டதால் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.24 17:22:00 +0530

Subordinate Judge,
Tiruvarur.